# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# நிர்வாக அறிக்கை 2024–2025

## 1.அமைப்பும், மேலாண்மையும்

### 1.ஆட்சி எல்லை

இந்நகராட்சி 12.08.1949ம் தேதிய 1948 எண் உள்ளாட்சி துறை அரசாணையின்படி 01.10.1949ம் தேதி முதல் 3ம் நிலை நகராட்சியாக அமைக்கப்பட்டது. 10.02.1970 ம் தேதிய 194 எண் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அரசாணையின் படி 16.1.1970 ம் தேதி முதல் 2ம் நிலைக்கும் 21.09.1977ம் தேதிய 1532 எண் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணையின் படி 01.10.1977 முதல் நிலைக்கும் உயர்த்தப்பட்டு மேலும், அரசாணை எண் 238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (தேர்தல்) வழங்கு துறை நாள் 02.12.2008 தேர்வு நிலையாக உயர்த்தி தேர்வுநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சியின் பரப்பளவு 7.51 சதுர கிலோ மீட்டர் ஆகும். அறிக்கை ஆண்டில் நகராட்சி எல்லையில் எந்தவித மாறுதலும் இல்லை. 2011ம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கெடுப்பின் படி நகரின் மக்கட்தொகை 59523 ஆகும். இதில் ஆண்கள் 28866 பெண்கள் 30657 ஆகும். தற்போது 2024 ஆம் ஆண்டு இடைக்கால மக்கள் தொகையாக 66000 ஆகும்.

## 2.இயங்கும்அலுவலர்கள்

### அ. ஆணையாளர்

திருமதி. T.சசிகலா அவர்கள் ஆணையாளராக 03.07.2023 முதல் 13.06.2024 வரை பணிபுரிந்துள்ளார். அவர்களை தொடர்ந்து 13.06.2024 முதல் நாளது வரை திருமதி. த.வ.சுபாஷினி அவர்கள் ஆணையாளராக பணிபுரிந்து வருகிறார்.

### ஆ.) பொறியாளர்

திரு.எம்.சிவக்குமார் அவர்கள், நகராட்சி பொறியாளராக 21.10.2022 முதல் 17.10.2024 முடிய பணிபுரிந்து வந்தார். அவர்களை தொடர்ந்து திரு.ஆர். தனுஷ்கோடி அவர்கள் நகராட்சி பொறியாளராக 21.10.2022 முதல் நாளது வரை பணிபுரிந்து வருகிறார்.

### இ)நகரமைப்பு அலுவலர்

திரு. S. சேகரன், நகரமைப்பு அலுவலர் 01.12.2021 முதல் 06.05.2023 ஆம் தேதி வரை பணிபுரிந்து, பணியிடைக்காலத்தில் காலமானார். மேற்படி பதவிக்கு நாளது வரை காலியிடம் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது.

### ஈ) மேலாளர்

அறிக்கை ஆண்டில் 01.04.2022 முதல் தற்போது வரை திருமதி.ப.ஜோதிமணி மேலாளராக பணிபுரிந்து வருகிறார்.

### உ) துப்புரவுஅலுவலர்

அறிக்கை ஆண்டில் 01.04.2022 முதல் தற்போது வரை திரு.ப.சோழராஜ் அவர்கள் துப்புரவு அலுவலராக பணிபுரிந்து வருகிறார்.

### ஊ) கணக்கர்

திரு.கே.பழனியப்பன் அவர்கள் 28.01.2022 முதல் கணக்கராக பணிபுரிந்து வருகிறார்.

## 3.நகர் மன்றம்

தமிழக அரசின் நகர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 11.06.1996 –ந் தேதிய 135 & 136 எண் அரசாணையின் படி இந்நகராட்சி 30 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 30 உறுப்பினர்களை கொண்டு 22.03.2022 முதல் இயங்கி வருகிறது.

01.04.2022 முதல் 31.03.2023 முடிய திரு.என்.ஆர்.நாகராஜ் நகர்மன்றத் தலைவர் அவர்கள் தனி அலுவலராக பணியாற்றி வருகிறார்.

**அ) கூட்டங்கள்**

நகரமன்ற கூட்டங்கள் பிரதி மாதமும், தேவைப்படும் போதும் நடைபெற்றன. அதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகள் கடைபிடிப்பதில் இடர்பாடு ஏதும் இல்லை.

| நடைபெற்ற கூட்டங்கள் விபரம் | 2023–2024 | 2024–25 |
|---|---|---|
| சாதாரணம் | 12 | 8 |
| அவசரம் | 03 | 2 |
| சிறப்பு | 04 | 2 |
| மொத்தம் | 19 | 12 |

கூட்டங்களில் நகர்மன்ற முடிவுக்கு வைக்கப்பட்ட பொருட்கள் யாதொரு தடையுமின்றி உடனுக்குடன் முடிக்கப்பட்டு வந்தன. நகரமன்றம் அறிக்கையாண்டில் முடிவு செய்த பொருட்களின் எண்ணிக்கை 322 ஆகும்.

**ஆ) குழுக்கள்**

1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின்படி நிரந்தரக் குழுக்களாக நியமனக்குழுவும், ஒப்பந்தக்குழுவும் அறிக்கையாண்டில் செயல்பட்டன.

அறிக்கையாண்டில் நடைபெற்ற ஒப்பந்தக்குழு கூட்டங்கள் வருமாறு :–

| | |
|---|---|
| நடைபெற்ற கூட்டங்கள் | 12 |
| முடிவு செய்யப்பட்ட பொருட்கள் | 322 |
| முந்தைய ஆண்டு முறையே நடைபெற்ற கூட்டங்கள் | –– |
| முடிவு செய்யப்பட்ட பொருட்கள் | 322 |

நகராட்சி ஆணையாளரே தனி அலுவலராக நியமிக்கப்பட்டதால் ஆணையாளரை தலைமையராக கொண்டு குழு உறுப்பினர்களாக நகராட்சி பொறியாளர், நகர் நல அலுவலர், நகரமைப்பு அலுவலர் மற்றும் மேலாளர் உள்பட ஐந்து பேர்கள் உள்ளடக்கியதாக அறிக்கை ஆண்டில் செயல்பட்டு வருகிறார்கள்.

**உள்ளூர் திட்டக்குழுக் கூட்டம்**

| விபரம் | 2023–24 | 2024–25 |
|---|---|---|
| உள்ளூர் திட்டக்குழு கூட்டங்கள் | – | – |
| முடிவு செய்யப்பட்ட பொருட்கள் | – | – |
| முடிவு செய்யப்படாத பொருட்கள் | – | – |

**நியமனக்குழுக் கூட்டம்**

| விபரம் | 2023–24 | 2024–25 |
|---|---|---|
| நடைபெற்றகூட்டங்கள் | 1 | 1 |
| முடிவு செய்யப்பட்ட பொருட்கள் | 1 | 1 |
| முடிவு செய்யப்படாத பொருட்கள் | – | – |

தொகுதி குழுக்கள் ஏதும் அறிக்கையாண்டில் நியமிக்கப்படவில்லை.

## 4.மேலாண்மை

அறிக்கையாண்டில் நகராட்சிக்கு தேவையான பலதரப்பட்ட படிவங்கள், அறிக்கைகள், அறிவிப்புகள் அச்சடித்த வகையிலும் மற்றும் படிவங்கள் எழுது பொருள்கள் வாங்கிய வகையிலும் ரூ.11,04,149/- செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், கணிணி தொடர்பான உபகரணங்கள் வாங்கிய வகையில் ரூ.34,535/- செலவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 5.சாலைகள்

நகராட்சி எல்லைக்குள் தேசிய நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகள் இல்லை.

நகராட்சி பராமரிப்பதில் உள்ள சாலைகளின் நீளம் கீழே குறிக்கப்பட்டுள்ளது.

| | அறிக்கை ஆண்டு | முந்தைய ஆண்டு |
|---|---|---|
| 1) தார் சாலை | 95.13 கி.மீ | 95.13 கி.மீ |
| 2) கல சாலை | - | - |
| 3) சிமெண்ட் சாலை | 17.55 கி.மீ | 17.55 கி.மீ |
| 4) சரளை, மண் சாலை | 1.673 கி.மீ | 1.673 கி.மீ |

நகராட்சி எல்லைக்குள் தமிழக அரசு நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் 7. 2 கி.மீ. ஆகும்.

### அ. பரிசல் துறைகள்

இந்நகராட்சியின் பராமரிப்பில் (நகராட்சி எல்லைக்குள்) பரிசல் துறைகள் ஏதும் இல்லை.

### ஆ.பூங்காக்கள்

இந்நகராட்சியில் கீழ்கண்ட திட்ட நிதிகளின் கீழ் பூங்காக்கள் பராமரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண் | பூங்கா பராமரிப்பு | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | அம்ரூத் 2.0 மித்ரா | 10.00 |

## 6. இளைப்பாறும் விடுதிகள், சத்திரங்கள் மற்றும் தண்ணீர் பந்தல்கள்.

பயணியர் விடுதி கட்டிடம் எதுவும் இல்லை.

## 7. கருவிகள், இயந்திரங்கள் மற்றும் பணியிடங்கள்

துப்புரவு தொழிலுக்கு பொருள்கள் கருவிகள் மற்றும் தளவாடங்கள் ஆகியவை ரூ. 1,72,000 /- செலவில் வாங்கப்பட்டுள்ளது.

சுண்ணாம்புத்தூள் - 8MT (8,000 kg)
பிளீச்சிங் பவுடர் - 2.5 MT (2500 kg)

நிறுவனங்களின் சமுதாய பங்களிப்பு நிதியில் டிராக்டர் டோசர் இயந்திரம் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 8. தெருவிளக்குகள்

இந்நகராட்சியில் உள்ள சாலைகளில் 2626 எல்.இ.டி. விளக்குகளும், 8 உயர் கோபுர மின் விளக்குகளும், 470 சோடியம் ஆவி விளக்குகளும் PPP முறையில் M/S. Schnell Energy Equipments Ltd நிறுவனம் பராமரித்து வருகிறது.

அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 15 W LED விளக்கு | – | 2626 |
| சோடியம் ஆவிவிளக்கு | – | 462 |
| உயர்கோபுர விளக்கு | – | 8 |
| | மொத்தம் | 3096 |

## 9. பள்ளிகள்

இந்நகராட்சியின் பராமரிப்பில் நடத்தப்பட்டு வரும் மூன்று மேல்நிலைப்பள்ளி நீங்கலாக கீழ்கண்ட மேல்நிலைப்பள்ளிகள் தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| 1. வைரவிழா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி | 1 |
| 2.பழனியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி | 1 |
| 3.அமலா மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி பள்ளி | 1 |
| 4. சாரதா மேல்நிலைப்பள்ளி | 1 |
| 5. பாரதி வித்யாலயா மெட்ரிக்மேல்நிலைப்பள்ளி | 1 |

இந்நகர எல்லைக்குள் நடத்தப்பட்டுவரும் மேல்நிலைப்பள்ளிகள் இந்நகராட்சிக்கு போதுமானதாகும்.

## 9 (அ).சத்துணவு

இந்நகராட்சியில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டத்தின் கீழ் 2 வயது முதல் 4 வயது வரையிலான 15 மையங்கள் நடைபெற்று வந்தது. மாவட்ட திட்ட அலுவலர், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் 328 திட்டம், ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.அ2/1710/2003 நாள் 11.3.2004 ன் படி மேற்படி 15 மையங்களும் 1.4.2004 முதல் அங்கன்வாடி மையங்களாக மாற்றம் செய்து கோபிசெட்டிபாளையம் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகத்துடன் இணைக்கப்பட்டது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் 5 வயது முதல் 9 வயது வரையிலும் 10 வயது முதல் 14 வயது வரையிலும் பள்ளி செல்லும் மாணவ, மாணவியர்களுக்கு 7 பள்ளி சத்துணவு மையங்களின் மூலம் சத்துணவு வழங்கப்படுகிறது. பயனடைந்தவர்களின் எண்ணிக்கை தினசரி 990 ஆகும்.

நகராட்சி பள்ளிகள் அனைத்தும் சொந்த கட்டிடங்களில் செயல்பட்டுவருகிறது .

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவுத்திட்டம் ( 5 + 9, 10 + 14)**

| | | |
|---|---|---|
| மையங்களின் எண்ணிக்கை | : | 7 |
| அமைப்பாளர்கள் | : | 3 |
| சமையலர்கள் | : | 2 |
| உதவியாளர்கள் | : | 3 |
| உணவு உண்ணும் பயனாளிகள் | : | 990 |
| பள்ளியில் பயிலும் மாணவர்கள் | : | 1232 |

## 9 (ஆ).காலை உணவு வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் 07.05.2022 ஆம் நாளிட்ட தமிழக சட்டப் பேரவையின் விதி எண்.110 இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து பள்ளி மாணவ மாணவியர்கள் பசியின்றி பள்ளிக்கு வருவதை உறுதி செய்தல், ஊட்டச்சத்து குறைபாட்டினால் பள்ளி குழந்தைகள் பாதிக்கப்படாமல் இருத்தலை உறுதி செய்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல் குறிப்பாக இரத்த சோகை குறைபாட்டினை நீக்குவது, குழந்தைகள் பள்ளி வருகையினை அதிகரிப்பதினை தக்க வைத்துக்கொள்வது மற்றும் வேலைக்கு செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையினை குறைப்பது போன்ற நல்ல குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு காலை உணவுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் கடந்த 25.08.2023 முதல் இந்நகராட்சி பகுதியில் செயல்பட்டு வரும் 5 நகராட்சி பள்ளிகள் மற்றும் அருகில் உள்ள லக்கம்பட்டி பேரூராட்சியின் 2 பள்ளிகளுக்கும் சேர்த்து மொத்தம் 7 பள்ளிகளுக்கு வகுப்பு 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு காலை உணவுத்திட்டம் நகராட்சி நிர்வாகம் மூலம் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு விதமான சிற்றுண்டி வகைகள் பரிந்துரைக்கப்பட்டு தரமான காலை உணவுகள் காலை 7.30 மணிக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பள்ளிகளையும் சென்றடையும் விதத்தில் பள்ளிகளுக்கு அருகாமையில் உரிய வாகன வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு காலை 8.00 மணி முதல் 8.50 மணிக்குள் மாணவ மாணவிகளுக்கு காலை உணவு பரிமாரப்பட்டு வருகிறது.

இதன் மூலம் 468 மாணவ மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர்,

மேற்படி காலை உணவு வழங்குவதற்கு முன்னதாக தயார்செய்யப்பட்ட உணவினை பள்ளி மேலாண்மைக் குழு ஒவ்வொரு நாளும் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு உணவினை சுவை பார்த்த பின்னரே பரிமாரப்பட்டு வருகிறது. உணவு பாதுகாப்புத் துறை அலுவலர்கள் அவ்வப்போது பள்ளிகளை ஆய்வு செய்து உணவின் தரத்தினை உறுதி செய்து வருகின்றனர்.

மேற்படி அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை உணவு திட்டம் வழங்குவது தொடர்பாக பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப செலவினங்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு நிதி விடுவிக்கப்பட்டு தனி வங்கி கணக்கு துவக்கப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி பள்ளிகள் அனைத்தும் சொந்த கட்டிடங்களில் செயல்பட்டு வருகிறது .

## 9(இ). அம்மா உணவகம்

கோபிசெட்டிபாளையம் நகராட்சி அம்மா உணவகம் அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அம்மா உணவகத்தில் குறைந்த விலையில் காலை 7மணி முதல் 10 மணி வரை காலை சிற்றுண்டியும், பிற்பகல் 12 மணி முதல் 3 மணி வரை மதிய உணவும் தரமான முறையில் சுகாதாரமான சுற்றுச்சூழலுடன், 12 மகளிர் சுய உதவிக்குழு நபர்கள் மூலம் உணவுகள் தயார் செய்து பரிமாரப்பட்டு வருகிறது. மேலும் அம்மா உணவக செயல்பாட்டிற்காக தனி வங்கி கணக்கு துவங்கப்பட்டு நகராட்சி பொது நிதியின் மூலம் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## பொது நூல் நிலையங்கள்

இந்நகர்மன்றம் மற்றும் தனியாரால் எவ்விதமான நூலகமும் நடத்தப்படவில்லை. மாவட்ட நூலக ஆணைக்குழுவால் 3 நூலகங்கள் இந்நகரில் நடத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்குட்பட்ட கிராமப்புறங்களில் போட்டித்தேர்வுக்கு தயார் ஆகும் மாணவ, மாணவிகளின் நலனை கருத்தில் கொண்டு12.08.2024 அன்று துவக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மார்ச் 2025 வரை மாணவர்கள் அறிவுசார் நூலகத்தை பயன்படுத்தி வருகின்றனர். பிரதிவாரம் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் போட்டித் தேர்விற்கான சிறப்பு Online வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

## 11.பொது சுகாதாரம்

## மருத்துவ வசதி

நகராட்சியால் பொது சுகாதார துறையுடன் இணைந்து நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூடுதலாக மொடச்சூர் பகுதியில் வசிக்கும் மக்களின் வசதிக்காக நகர்புற நலவாழ்வு மையம் அமைக்கப்பட்டு அப்பகுதி மக்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. பொது மக்களின் வசதிக்காக அரசினரின் மருத்துவமனை இந்நகரில் உள்ளது.

## திடக்கழிவுமேலாண்மை

இந்நகரில் தினசரி சேகரமாகும் 18 டன் திடக்கழிவுகளில் 11.7 டன் மக்கும் கழிவுகளை மூன்று நுண்உரக்குடில் மையத்தில் அரைத்து தொட்டிகளில் இட்டு உரமாக்கி விவசாயிகளுக்கு செழிப்பு என்ற பெயரில் குறைந்த விலையில் வழுங்கப்படுகிறது. மேலும், 3 மெட்ரிக் டன் அளவில் பயோகேஸ் பிளாண்டில் பயோகேஸ் தாயாரிக்கப்பட்டு அதனை மின்சாரமாக மாற்றப்பட்டு, அவ்விடத்திலேயே அரைக்கப்படும் இயந்திரத்திற்கு பயன்படுத்தப்பட்டுவருகிறது.

மக்காத பிளாஸ்டிக் கழிவுகளில் மறுசுழற்சிக்கு பயன்படும் பிளாஸ்டிக் மற்றும் இதர பொருட்களை தூய்மை பணியாளர்கள் விற்று பயன் பெறுகின்றனர்.

மறுசுழற்சிக்கு பயன்படாத பிளாஸ்டிக் கழிவுகள் அரியலூரில் உள்ள சிமெண்ட் ஆலைக்கு மாற்று எரிபொருளாக 753.41 MT அனுப்பப்பட்டுள்ளது.

நகராட்சி பகுதியில் உருவாகும் அனைத்து கழிவுகளும் அறிவியல் முறைப்படி முறையாக அப்புறப்படுத்தப்பட்டு தூய்மையான நகரமாக திகழ்கிறது.

## பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் ஒருமுறை பதிவு செய்து பெறப்பெற்று, ஆன்லைன் மூலம் எடுக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

## தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்டம்

தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நகராட்சி மற்றும் தனியார் துறையில் மலக் கழிவுகளை சுத்தம் செய்யும் பணியாளர்கள் 252 நபர்கள்

கணக்கெடுக்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தாட்கோ நலவாரியத்தின் கீழ் 25 பணியாளர்களுக்கு வீடு வழங்கப்பட்டுள்ளது.

## பொதுக்கழிப்பிடங்கள்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் பொது மக்கள் உபயோகத்திற்கான கட்டண கழிப்பிடங்கள் புதிய பேருந்து நிலையத்தில் இரண்டும், வாரச்சந்தை பகுதியில் ஒன்றும் மற்றும் மார்க்கெட் பகுதியில் ஒன்றும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேலும் பொது மக்கள் உபயோகத்திற்காக 27 சமுதாய கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

துப்புரவு தொழிலாளர்கள் நலன்கருதிகுறைந்த வருவாய் ஊழியர்களுக்காக இந்நகராட்சியில் 72 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

ஆண் துப்புரவு ஊழியர்களுக்கு தலா 2 முழுகால் பாலியஸ்டர் சட்டையும், 2 அரைக்கை சட்டையும் 2 மீட்டர் தலைபாகை துணியும் , பெண் ஊழியர்களுக்கு தலா 2 சேலையும், 2 ரவிக்கைகளும் எல்லோருக்கும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. துப்புரவுப்பணிக்காக 2 டிப்பர் லாரிகள், 1 கழிவு நீர் இறைக்கும் லாரி, குடிநீர் விநியோக லாரி 1 மற்றும் 18 பேட்டரி வண்டிகள் மற்றும் 30 தள்ளுவண்டிகள் மூலம் திடக்கழிவு சேகரம் செய்து குப்பைகள் இல்லாத நகரமாக உருவாக முயற்சிகள் மேற்க்கொள்ளப்பட்டு குப்பை தொட்டிகள் இல்லாத நகரமாகஉள்ளது .

## உரிமக்கட்டணங்கள் ஆன தொழில்கள்

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 249 (1)(எ) பிரிவின்படி நகராட்சி எல்லைக்குள் உணவுப்பொருட்கள் விற்பனை செய்பவர்களுக்கும், இயந்திர நிறுவனங்களுக்கும் தொழில் உரிமம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. தொழில்கள் நடக்கும் இடங்களை துப்புரவு அலுவலரால் காலமுறைப்படி பார்வையிடப்படுகிறது. உரிமையாணை நிபந்தனைகளை மீறி நடத்துபவர்களின் மீது சட்டப்படி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. உரிமையாணை கட்டணம் மூலம் ரூ.16,46,017/- வருவாய் கிடைக்கப்பெற்றுள்ளது.

## குறைந்த செலவில் நவீன கழிப்பிடம் கட்டுதல்

நகரில் உள்ள தனியார் உலர் கழிப்பிடங்கள் அனைத்தும் தற்போது குறைந்த செலவிலான நவீன கழிப்பிடங்களாக மாற்றப்பட்டுள்ளது. தூய்மை பாரததிட்டத்தில் 637 தனிநபர்இல்லக்கழிப்பிடங்கள்கட்டப்பட்டுபயன்பாட்டில்உள்ளது. திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சியாக மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

### தடுப்பூசித்திட்டம் 2024-2025

அறிக்கையாண்டில்

1. தட்டம்மைதடுப்பூசி – 566
2. DPD தடுப்பூசி – 566
3. PENDA தடுப்பூசி – 538
4. OPV தடுப்பூசி – 540
5. PCG தடுப்பூசி – 540

போன்ற தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

குடிநீர் திட்டம்

ஈரோடு மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நகரமாகவும் தேர்வு நிலை நகராட்சியாகவும் கோபிசெட்டிபாளையம் நகராட்சி உள்ளது. இந்நகராட்சிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த்திட்டம் 1958 ம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. நகரிலிருந்து வடமேற்கு திசையில் சுமார் 6.00 கி.மீ. தொலைவில் ஓடிக்கொண்டிருக்கிறது. பவானி ஆற்றில் தென்கரையில் செங்கலரை என்ற இடத்தில் தலைமை குடிநீரேற்று நிலையம் அமைந்துள்ளது. இந்நகராட்சியில் 1951 ம்ஆண்டு மக்கள் தொகை 33,500 ஆகும். 12.5 கு.தி. இரண்டு மோட்டார் நதி நீர் இறைப்பு நிலையத்திலும் 30.00 குதிரை திறன் கொண்ட இரண்டு மோட்டார் சுத்த நீர் இறைப்பு நிலையத்தில் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. தலைமை குடிநீர் நிலையத்திலிருந்து 12 அங்குல வார்ப்பு இரும்பு பிரதான குழாய் மூலம் நீர் இறைக்கப்பட்டு சத்தி மெயின் ரோட்டில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு பொது மக்களுக்கு வினியோகம் செய்யப்பட்டது. மேல்நிலைத்தொட்டி கொள்ளளவு 5,11,875 இலட்சம் பிரதான குழாயின் மொத்தம் நீளம் 4.8 கி.மீ. ஆக இருந்தது.

நகரில் பெருகி வரும் மக்கட் தொகைக்கு ஏற்ப குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க 1978ம் ஆண்டில் ரூ.15.7 இலட்சம் செலவில் அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. நதிநீர் இறைக்க இயங்கி வந்த 12.5 கு.தி. மின்மோட்டார் பம்பு செட்டுகளுக்கு பதிலாக 17.5 கு.தி. கொண்ட பம்புகளும் நதிநீர் இறைப்பு நிலையத்தில் பொருத்தப்பட்டன. இவை ஒரு நிமிடத்திற்கு 3070 லிட்டர் வீதம் 17.00 மீட்டர் உயரத்திற்கு நீர் உறிஞ்சும் திறன் கொண்டவை அதுபோன்றே சுத்த நீர் இறைக்க இயங்கி வந்த 30.00 கு.தி. கொண்ட மோட்டார் பம்புகள் மாற்றப்பட்டு 50.00 கு.தி. கொண்ட இரண்டு புதிய பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டது. இந்த புதிய பம்பு செட்டுகள் 51.00 மீட்டர் உயரத்திற்கு 3000 லிட்டர் நீர் இறைக்கக்கூடிய திறன் கொண்டவையாக இருந்தன.

2000 ம் ஆண்டில் ரூ.167.01 இலட்சம் செலவில் குடிநீர் அபிவிருத்திப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு முடிக்கப்பெற்று பணிகள் நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவற்றில் மூன்று மேல்நிலைத் தொட்டிகள் கட்டுதல் குடிநீர் விநியோக குழாய்கள் இல்லாத இடங்களுக்கு புதியதாக விநியோக குழாய் போடுதல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும்மேற்படி திட்டத்தின் மூலம் ஆற்று நீரை இறைக்கும் தலைமை நிலையத்தில் கூடுதலாக ஒரு சுத்திகரிப்பு நிலையம் கட்டும்பணி முடிக்கப்பட்டு விட்டது. 17.5 கு.தி. மின் மோட்டாருக்கு பதிலாக 35.00 கு.தி. மின் மோட்டார் 2 யூனிட் மாற்றப்பட்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட நீரை உந்தும் 50.0 கு.தி. மின் மோட்டாரும் 100 கே.வி.ஏ. மின் மாற்றிகளை 200 கே.வி.ஏ. மின் மாற்றியாக மாற்றி அமைத்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் ரூ.469.86 லட்சத்தில் குடிநீர் அபிவிருத்தி மேம்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்ட பணியில் தலைமை நீரேற்று நிலையத்தின் நதிநீர் இறைப்பு ஏற்கனவே இயங்கி வந்த இரண்டு 35 குதிரை வேகத்திறன் கொண்ட டர்பைன் மோட்டார் பம்புசெட்டுகளுக்கு மாற்றாக இரண்டு 50 கு.வே. திறன் கொண்ட டர்பைன் மோட்டார் பம்புசெட்டுகள் பொருத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. மேலும், புதிய 20 குதிரை வேகத்திறன் கொண்ட நீர்மூழ்கி மோட்டார் ஒன்றும், 30 குதிரைத்.திறன் கொண்ட நீர்மூழ்கி மோட்டார் ஒன்றும் பொருத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. 2 புதிய 8 MLD மற்றும் 3 MLD கொள்ளளவு

கொண்ட காற்றூட்டிகள் கட்டப்பட்டு (Aeroator) இயக்கத்தில் இருந்து வருகிறது. மேலும், சுத்தநீர் இறைப்பு நிலையத்தில் புதியதாக ஏற்கனவே இயக்கத்தில் உள்ள மோட்டார்களுக்கு மாற்றாக 75 குதிரை வேகத்திறன் கொண்ட மோட்டார்கள் 3 எண்ணம் நிறுவப்பட்டு இயக்கத்தில் இருந்து வருகிறது. மேலும், தலைமை நீரேற்று நிலையத்தின் அனைத்து அத்தியாவசியமான பராமரிப்பு பணிகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மேலும், 300 MM பிரதான நீர் உந்து குழாய்கள் 30.00 கி.மீ. அளவிற்கு புதியதாகவும், நிலையில் உள்ள 300 MM பிரதான நீர் உந்து குழாய்கள் சீரமைப்பு பணிகளும் 29.30 கி.மீ. அளவிற்கு மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

நகர் முழுவதும் பகிர்மானக்குழாய்கள் 120.00 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், வீட்டு வசதி வாரிய குடியிருப் பகுதியில் 7 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நீர் தேக்கத்தொட்டி புதியதாக கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

சாய்பாபா நகரில் 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி புதியதாக கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

இயக்குதலும், பேணுதலும் இடை நிரப்பு நிதி திட்டம் 2013–14 ன்கீழ் பூரணி நகர் மற்றும் ஜெய் துர்க்கை நகரில் 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி புதிதாக கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது.

தலைமை நீரேற்று நிலையத்தில் தினசரி 24 மணி நேரமும் மின் மோட்டார் இயக்கப்பட்டு நாளொன்றுக்கு 81.90லட்சம் லிட்டர் குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

கோபிசெட்டிபாளையம் நகராட்சி 2011–ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 59523 மக்கள் தொகை கொண்டதாகும். மக்கள் தொகை கணக்கீட்டின்படி தேவைப்படும் குடிநீரின் அளவு 5.36 MLD. தற்போது பவானி ஆற்றிலிருந்து மற்றும் உள்ளூர் நீராதாரங்களின் வழியாக பெறப்படும் குடிநீரின் அளவு 6.13 எம்எல்டி ஆகும். பெறப்படும் குடிநீரைக் கொண்டு நகரின் 30 வார்டுகளிலும் நபர் ஒன்றுக்கு 103 லிட்டர் வீதம் 3 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. தற்போதைய மக்கள் தொகை 66,000 ன் படி குடிநீர் அளவு 8.91 எம்.எல்.டி ஆகும். தற்போது நாள் ஒன்றுக்குநபர் ஒன்றுக்கு135 லிட்டர் வீதம், ஒருநாள் இடைவெளியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் (IUDM) 2018–19–ன் கீழ் ரூ.52.80 கோடி மதிப்பீட்டில் குடிநீர் ஆதாரம் மற்றும் குடிநீர் விநியோகம் மேம்பாடு செய்யும் பணிக்கு அரசாணை எண். (எம் எஸ்) 82 நாள்.23.08.2018ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குடிநீர் திட்டத்தில் தலைமை நீரேற்று நிலையத்தில் கூடுதல் திறன் கொண்ட புதிய மின் மோட்டார்கள் அமைக்கவும், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மேம்பாடு செய்திடவும், தற்சமயம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகரில் உள்ள 10 மேல்நிலைத் தொட்டிக்கும் நீர் ஏற்றப்படும் மூன்று குடிநீர் உந்து குழாய்களை மாற்றி ஒரே உந்து குழாயாக 17.934 கி.மீக்கு நீளத்திற்கு புதியதாக அமைக்கவும், குடிநீர் உந்து குழாய் மற்றும் விநியோக குழாய்களை தாங்கும் வகையில் 5 இடங்களில் தாங்கு பாலம் (Pipe carrying bridge) அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும் நகரில் உள்ள அனைத்து குடிநீர் விநியோக குழாய்களையும் மாற்றி டிஎம்ஏ பகுதி அடிப்படையில் புதிய குடிநீர் விநியோக பகுதிகளாக பிரித்து 140.00 கி.மீ நீளத்திற்கு குழாய்கள் அமைக்கவும், நகரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் புதிய குடிநீர் இணைப்புகள் 19491 எண்ணிக்கை வழங்கிடவும் வகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு 28.02.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு 06.03.2019 முதல் பணிகள் நடைபெற்று வருகிறது. தற்சமயம் குடிநீர் விநியோக குழாய்கள் 135கி.மீ நீளத்திற்கு பதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் செயல்படுத்தப்பட்டால் இந்நகருக்கு கூடுதலாக 4.81 எம்எல்டி நீர் கிடைக்கும் மேலும் தினசரி சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படும். மேற்படி பணிகள் முடிக்கப்பட்டு 26.08.2022 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் காணொலி வாயிலாக திறக்கப்பட்டது. தற்சமயம் குடிநீர் விநியோகத்தில் சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

நகரில் பல்வேறு திட்டத்தின்கீழ் கைபம்பு பொருத்தப்பட்ட 77ஆழ்துளை கிணறுகளும் 1.5 கு.தி. மின்மோட்டார் பொருத்தப்பட்ட190 ஆழ்துளை கிணறுகளும்

பொது மக்கள் உபயோகத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது. நகராட்சியில் பழுதடையும் ஆழ்குழாய் கிணறு கை பம்புகள் மற்றும் சிறுமின் விசைபம்புகள் உடனுக்குடன் சரி செய்யப்பட்டு தடையின்றி இயங்கும் நிலையில் வைக்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சியில் 5 பொதுக்கிணறுகள் மூலம் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாதவாறு கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் அறிக்கையாண்டில் கீழ்க்கண்டவாறு குடிநீர் குழாய் இணைப்புகள்உள்ளது.

| | | |
|---|---|---|
| | | 2024–2025 |
| 1. | வீட்டு உபயோகத்திற்கான மீட்டர் பொருத்திய இணைப்புகள் | 14318 |
| 2. | வீட்டு உபயோகமற்ற மீட்டர் பொருத்திய இணைப்புகள் | 223 |
| | மொத்தம் | 14541 |

இந்நகர்மன்றம் குடிநீர் கட்டணங்களை 01.10.2013 முதல் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்க ஒப்புதல் அளித்துள்ளது.

| கணக்கீட்டு வகைகள் | 01.10.2013 ல் கட்டண விகிதம் 1000 லிட்டருக்கு |
|---|---|
| 1) வீட்டு உபயோகம் மீட்டர் | 10 |
| 2) வீட்டு உபயோகம் அல்லாதது (மீட்டர்) | -- |
| அ) தொழிற்சாலைகள் | 20 |
| ஆ) வணிக இடங்கள் | 20 |
| 3) குழாய் கட்டணம் வீட்டுஉபயோகம் மாதத்திற்கு | ரூ90/- |
| 4) வீட்டு உபயோகம் அல்லாதது | |
| அ) தொழிற்சாலைகள் மாதத்திற்கு | ரூ. 500/- |
| ஆ) வணிக இடங்கள் | ரூ. 500/- |

மேற்கண்ட திருத்திய விகிதங்கள் இந்நகர்மன்றத்தின் 30.05.2013 ந் தேதி 464 எண் தீர்மானத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. குடிநீர் வினியோக துணை விதிகளை திருத்தம் செய்து மேற்பார்வைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களது அனுமதி பெற்று இவ்வலுவலக ந.க.எண். 2560/2013/இ1 நாள் 02.08.2013 மூலம் வரி உயர்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும், நகர்மன்றத் தீர்மான எண் 509 நாள் 29.07.2013ன்படி 01.10.2013 முதல் குடிநீர் கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

| குடிநீர் வழங்கல் துறை 2024 –2025 | | | |
|---|---|---|---|
| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணிகள் | மதிப்பீடு (In Lakhs) |
| 1 | CGF | ஆடுவதைக் கூடத்தில் பராமரிப்பு பணி | 6.00 |
| 2 | SBM 2.0 | கரட்டூர் உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை Bio Mining முறையில் அகற்றுதல் | 15.00 |

மேற்கண்ட பணிகள் 2023–2024ல் துவங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

**வடிகால் மற்றும் பலவகை**

இந்நகராட்சியில் பெரும் பகுதிகளில் சிமெண்ட் தளம் போட்ட திறந்த வடிகால்கள் தான் உள்ளது. சிமெண்ட் தளம் போட்ட வடிகால் நீளம் 131.59 கி.மீ.

## பொது

**வருவாய் வரத்தக்க இனங்கள்**

வாரச்சந்தை, தினசரி சந்தை, பேருந்து நிலையம் மற்றும் குறைந்த வருவாய் பிரிவுக்கான குடியிருப்பு வீடுகள், அலுவலர் குடியிருப்புகள், நகராட்சி கடைகள் ஆகியவைகள் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**போக்குவரத்து பேருந்து**

இந்நகராட்சியில் எவ்வித போக்குவரத்து பேருந்துகள் நடத்தப்படவில்லை. தனியார் கம்பெனிகளும், தமிழ்நாடு அரசை சார்ந்த போக்குவரத்து கழகங்களாலும் நடத்தப்படும் நகர பேருந்து போக்குவரத்தால் இந்நகரம் பயனடைந்து வருகிறது.

| ஆண்டு | சந்தைகள் | பேருந்து நிலையம் | ஆடு வதை செய்யுமிடம் |
|---|---|---|---|
| 2024–2025 | 1 | 1 | 1 |

**சந்தைகள்**

**தினசரி சந்தை**

இந்நகராட்சியால் ஒரு தினசரி சந்தை பராமரிக்கப்பட்டு வந்தது.அது இடிக்கப்பட்டு புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது.

**வாரச்சந்தை**

இந்நகராட்சியால் மொடச்சூர் ரோட்டில் ஒரு வார சந்தை பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன் வருமானம் அறிக்கையாண்டில் ரூ.13,76,500/– சென்ற ஆண்டு ரூ.13,11,000/– ஆகும்.

## பேருந்து நிலையம்

ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித்திட்டத்தில் 1986 ம்ஆண்டில் புதிதாக இரண்டாம் தர பேருந்து நிலையம் கட்டப்பட்டு கட்டண வசூல் மூலம் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ.4,68,465/– ஆகும். சென்ற ஆண்டு வருமானம் ரூ.4,32,828/– ஆகும். பேருந்து நிலையத்தில் கட்டணம் செலுத்தி பயன்படுத்தப்படும் கழிப்பிடம் ஒன்று (ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக) உள்ளது. அதன் மூலம் கிடைத்த வருமானம் ரூ.5,52,243/– சென்ற ஆண்டு வருமானம் ரூ.5,25,945/– ஆகும். ஒவ்வொரு பேருந்துக்கும் ரூ.12/–வீதம் நிர்ணயம் செய்து நுழைவுக்கட்டணம் 7.8.2003 முதல் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

## ஆடுவதை செய்யுமிடம்

அறிக்கையாண்டில் ஆடுவதை செய்வதற்காக இடம் தொடர்ந்து இருந்து வருகிறது. வதை செய்யப்படும் கால்நடைகளை பரிசோதிப்பதற்காக அரசினர் கால்நடை மருத்துவருக்கு மாதம் ரூ.80/– வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் ஆடுவதை செய்யுமிடத்தில் வருமானம் ரூ.45,044/– ஆகும். சென்ற ஆண்டு வருமானம் ரூ.40,058/– ஆகும்.

## மரம் நடுதலும், பூங்காக்களும்

அறிக்கையாண்டில் தொடர்ந்து ஏழு பூங்கா பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் ரூ. 115.00 இலட்சம் மதிப்பீட்டில் 4 பூங்காக்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெறுகிறது. அறிக்கை ஆண்டில் பூங்காவிலும் நகரின் பல சாலை ஓரங்களிலும் நடப்பட்ட மரங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டு உள்ளன.

ஐயப்பா நகர் பூங்கா இடத்தில் 35 சென்ட் இடத்தில் 1100 மரக்கன்றுகள் மியாவாக்கி காடுகள் வளர்ப்பு முறையில் நடப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. ஆரம்பத்தில் இருந்த மரங்களின் எண்ணிக்கை | 8318 |
| 2. புதியதாக நடப்பட்டது | – |
| 3. பட்டுப்போனது / மழைகாற்று காரணமாக விழுந்தது | 26 |
| 4. ஆண்டு இறுதியில் உயிருடன் இருந்த மரங்களின் எண்ணிக்கை | 8292 |

## கோபிசெட்டிபாளையம் முழுமைத்திட்டம்

இத்திட்டம் நடப்பாண்டு வரை அமலில் உள்ளது. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் மொத்தம் அங்கீகரிக்கப்பட்ட 12 விரிவு அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## இதர பலன் தரும் முயற்சிகள்

## PMSVNNIDHI – திட்டம்

சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரம் மேம்படுத்தும் வகையில் வங்கிகள் மூலம் முதல் கடன் தவணைத் தொகை 1146 நபர்களுக்கு ரூ. 10,000/– வீதம் ரூ.1,14,60,000/– . இரண்டாவது தவணைத்தொகை 344 நபர்களுக்கு ரூ. 20,000/– வீதம் ரூ.68,80,000/– மற்றும் மூன்றாவது கடன் தவணைத்தொகையாக 68நபர்களுக்கு ரூ.50,000/– வீதம் ரூ.34,00,000/–ம் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், சாலையோர வியாபாரிகளுக்கு உணவு பண்டம் விற்பனை வண்டி ரூ. 98,000/– மதிப்பீட்டில் 3 வண்டியும், காய்கறி வண்டி ரூ. 98,000/– மதிப்பீட்டில் 5 வண்டியும், விற்பனை வண்டி

ரூ.20,000/– மதிப்பீட்டில் 2 வண்டியும் சாலையோர வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## பொது வருவாய்

### வருவாய் கணக்கு

இந்நகராட்சியில் உள்ள வீடுகளுக்கும் காலியிடங்களுக்கும் நகராட்சியில் விதிக்கப்படும் வரியின் விபரம் அதன் விகிதமும் கீழே தரப்பட்டுள்ளது.

| வீட்டு வரி | கட்டிடங்கள் மீது அரையாண்டு வருடவாடகை மதிப்பீடு | | காலியிடங்களின் மீது ஆண்டுக்கு சொத்து மதிப்பீடு |
|---|---|---|---|
| 1 | 2 | | 3 |
| 1) சொத்து வரி | 6.50 | 44 % | 47% |
| 2) குடிநீர் வரி | 4.50 | 31 % | 30 % |
| 3) கல்வி வரி | 2.50 | 17% | 16 % |
| 4) நூலக வரி | 1.10 | 8% | 7% |
| மொத்தம் | 14.60 | 100 | 100 |

### தொழில் வரி

தமிழ்நாடு சட்டம் 24/92ன் படி இந்நகராட்சியில் நுண்ணறிவுத்திறன் தொழில்கள் மரபு தொழில்கள் பணித்தொழில்கள் ஆகியவற்றின் மீதான புதிய தொழில்வரி விகிதங்கள் 1.10.2003 முதல் அமுல்படுத்தப்பட்டு 1.10.2008 முதல் முந்தைய தொழில்வரி விகிதத்தில் 35 % உயர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் 01.10.2013 முதல் முந்தைய தொழில் வரி விகிதத்தில் 25% சதவீதம் உயர்வு செய்யப்பட்டுள்ளது. தற்போது 01.10.2018 முதல் முந்தைய தொழில் வரி வீதத்தில் 25% சதவீதம் உயர்வு செய்யப்பட்டு வரி வசூல் செய்யப்பட்டு வருகிறது.

### வரி விகிதம்

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி 59523 மக்கள்தொகைகொண்டதாகும். நபர் ஒன்றுக்கு வரிவிகிதம் ரூ.2127 ஆகும். சென்ற ஆண்டு ரூ.1699/– ஆக இருந்தது.

### கட்டிடங்கள்

முந்தைய ஆண்டில் 2023–2024–இல் இந்நகராட்சியில் வரிவிதிக்கப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 21839 தற்போது 2024–2025–ஆம் ஆண்டில் புதியதாக வரி விதிக்கப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை 320 ஆக மொத்தம் 22159 ஆகும்.

### காலி இடங்கள்

தற்போது 01.10.2009 வரை இரண்டாம் அரையாண்டு முதல் அரசாணை எண் 151 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 20.08.2009ன்படி காலியிடங்களுக்கு வரி விதிக்கப்படும் போது சதுர அடி மதிப்பீட்டின்படி வரிவிதிப்பு செய்யப்படுகிறது.

### கேட்பு, வசூல், பாக்கி

வரி மற்றும் வரியில்லா இனங்களில் நிலுவை மற்றும் நடப்பு சேர்த்து விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஆண்டு | கேட்பு<br>ரூ | வசூல்<br>ரூ | தள்ளுபடி<br>ரூ | பாக்கி<br>ரூ | வசூல்<br>சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | 28161900 | 26042383 | – | 2119517 | 92.47 |
| 2011–2012 | 47922556 | 47180679 | – | 741877 | 92.89 |
| 2012–2013 | 56391973 | 51939635 | – | 4452338 | 92.10 |
| 2013–2014 | 57002961 | 55764460 | – | 1238501 | 97.83 |
| 2014–2015 | 63692845 | 62879789 | – | 813056 | 93.70 |
| 2015–2016 | 68196198 | 67376892 | – | 819306 | 94.47 |
| 2016–2017 | 71426765 | 69179663 | – | 2247102 | 92.32 |
| 2017–2018 | 8210300 | 7174900 | – | 1035400 | 87.38 |
| 2018/2019 | 93799000 | 68725500 | – | 23655000 | 73.27 |
| 2019–2020 | 92390472 | 74312490 | – | 18077982 | 80.43 |
| 2020–2021 | 90457881 | 59424000 | – | 31033881 | 65.69 |
| 2021–2022 | 92174450 | 82008476 | – | 10165974 | 88.97 |
| 2022–2023 | 126621058 | 121039307 | – | 5581751 | 95.59 |
| 2023–2024 | 128657851 | 122813451 | – | 5844400 | 95.46 |
| 2024–2025 | 147252635 | 136610938 | – | 10641697 | 92.77 |

## கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## வருவாய் மற்றும் மூலதன நிதி
## 2024–2025 ம் ஆண்டு முதலீடுகள் பற்றிய விபரம்

| வ. எண் | விபரம் | ஆரம்ப இருப்பு | நடப்பாண்டு முதலீடு | பெறப்பட்ட வட்டி | திரும்ப பெறப்பட்ட தொகை | மறு முதலீடு தொகை | பெறப்பட வேண்டிய வட்டி | முதிர்வு தொகை | முதிர்வு நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| 1 | Equitas வங்கி | 8293000 | - | - | - | - | 497580 | 11171278 | 23.03.2027 |

## கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## குடிநீர் மற்றும் வடிகால் நிதி
## 2024–2025 ம் ஆண்டு முதலீடுகள் பற்றிய விபரம்

| வ. எண் | விபரம் | ஆரம்ப இருப்பு | நடப்பாண்டு முதலீடு | பெறப்பட்ட வட்டி | திரும்ப பெறப்பட்ட தொகை | மறு முதலீடு தொகை | பெறப்பட வேண்டிய வட்டி | முதிர்வு தொகை | முதிர்வு நாள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| 1 | Equitas வங்கி | 1593000 | - | - | - | - | 115493 | 2282482 | 8.06.2028 |

## கோபிசெட்டிபாளையம் நகராட்சி
## கல்வி நிதி
## 2024–2025 ம் ஆண்டு முதலீடுகள் பற்றிய விபரம்

| வ.எண் | விபரம் | ஆரம்ப இருப்பு | நடப்பாண்டு முதலீடு | பெறப்பட்ட வட்டி | திரும்ப பெறப்பட்ட தொகை | மறு முதலீடு தொகை | பெறப்பட வேண்டிய வட்டி | முதிர்வு தொகை | முதிர்வு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ | ரூ |
| ஏதுமில்லை | | | | | | | | | |

## தணிக்கை

இந்நகராட்சியில் 2022–2023ஆம் ஆண்டிற்கான நிலுவை தணிக்கை தடை கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்த தணிக்கை பத்திகள்39நிலுவையில் உள்ளது.

| வ.எண் | வருடம் | நிலுவை தணிக்கை பத்திகள் |
|---|---|---|
| 1 | 2017–2018 | 1 |
| 2 | 2018–2019 | 2 |
| 3 | 2019–2020 | 2 |
| 4 | 2020–2021 | 8 |
| 5 | 2021–2022 | 8 |
| 6 | 2022–2023 | 18 |
| | மொத்தம் | 39 |

மேலும், 2024–2025 ஆம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள், உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை துறை, ஈரோடு அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டு, 2024–2025ஆம் ஆண்டிற்கு தணிக்கை நடைபெற உள்ளது.

## இருப்பும் பொறுப்பும்

அறிக்கையாண்டில் உள்ள வழக்குகள் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆண்டு ஆரம்பத்தில் இருந்த வழக்குகள் | : | 40 |
| 2. | அறிக்கையாண்டில் தாக்கல் செய்யப்பட்டவை | : | 2 |
| | மொத்தம் | : | 42 |
| 3. | தணிக்கையாண்டில் முடிவு செய்யப்பட்டவை | : | – |
| 4. | ஆண்டு முடிவில் நிலுவை வழக்குகள் | : | 42 |
| | மொத்தம் | : | 42 |

## பொது குறிப்புகள்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியின் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. நிர்வாக அதிகாரிக்கும் நகராட்சி பிரிவு அலுவலர்களுக்குமிடையே சுமூகமாக உறவும் இருந்து நகராட்சி நிர்வாகம் செம்மையாக நடைபெற்று வருகிறது. நகராட்சி நிர்வாகம் (பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி) எவ்வித இடர்பாடின்றி செம்மையாக செயல்பட்டு வருகிறது.

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி